பிரஸார் பாரதி
இந்திய வானொலி, சென்னை-4
16 03 2025 **SUNDAY** 6 30 **PM**

வணக்கம் - மாநிலச் செய்திகள்
தலைப்புச் செய்திகள்

1. ஜனநாயகத்தின் ஆன்மாவாக விமர்சனங்கள் திகழ்வதாக பிரதமர் திரு. நரேந்திர மோடி கூறியுள்ளார்.

2. மாற்று எரிபொருள் பயன்பாட்டிற்கு ஊக்கமளிக்கப்பட வேண்டியதன் அவசியத்தை மத்திய அமைச்சர் திரு. நிதின் கட்கரி வலியுறுத்தியுள்ளார்.

3. நீர்வளத்துறை மேற்கொண்டு வரும் திட்டப் பணிகளை குறித்த காலத்திற்குள் நிறைவேற்ற வேண்டும் என்று மாநில அரசு அதிகாரிகளுக்கு அறிவுறுத்தியுள்ளது.

4. தமிழகத்தில் திமுக அரசு பொறுப்பேற்ற பின்னர் கனிம வளங்கள் கொள்ளை அதிகரித்துள்ளதாக பிஜேபி குற்றம் சாட்டியுள்ளது.

5. ஸ்பெயின் பாரா பேட்மிண்டன் போட்டியில் இந்தியா நான்கு தங்கப்பதக்கங்களை வென்றது.

<<<<>>>>

ஜனநாயகத்தின் ஆன்மாவாக விமர்சனங்கள் திகழ்கின்றன என்று பிரதமர் திரு. நரேந்திர மோடி கூறியுள்ளார்.

அமெரிக்காவைச் சேர்ந்த இணையஒலி நெறியாளர் **Lex Fridman** நடத்திய கலந்துரையாடலில் அவர் இவ்வாறு கூறினார்.

விமர்சனங்களை தாம் வரவேற்பதாகவும் அவர் தெரிவித்தார்.

இந்தியா எப்போதும் அமைதியையே விரும்புவதாகவும் பிரதமர் கூறினார்.

அமைதிக்கான எந்த நடவடிக்கைகளுக்கும் இந்தியா துணைநிற்கும் என்றும் அவர் தெரிவித்தார்.

அமைதி என்பது இந்தியாவின் கலாச்சாரம் மற்றும் பாரம்பரியமாக உள்ளது என்று அவர் கூறினார்.

இதன் காரணமாக அமைதிக்கான இந்தியாவின் முன்னெடுப்புகளுக்கு உலகம் செவிசாய்ப்பதாகவும் பிரதமர் தெரிவித்தார்.

எந்தவொரு பிரச்சினைக்கும் போர் தீர்வாகாது என்றும் திரு. நரேந்திர மோடி கூறினார்.

<<<<>>>>

மாற்று எரிபொருள் பயன்பாட்டிற்கு ஊக்கமளிக்கப்பட வேண்டியதன் அவசியத்தை மத்திய அமைச்சர் திரு. நிதின் கட்கரி வலியுறுத்தியுள்ளார்.

நாக்பூரில் நிகழ்ச்சி ஒன்றில் பேசிய அவர், நாடுமுழுவதும் கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துவதற்கு மத்திய அரசு உயர் முன்னுரிமை அளித்துள்ளதாக கூறினார்.

சர்வதேச தரத்திற்கு இணையாக கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துவதற்கு முக்கியத்துவம் அளிக்கப்பட்டுள்ளதாகவும் திரு. நிதின் கட்கரி தெரிவித்தார்.

<<<<>>>>

தமிழகத்தில் நீர்வளத்துறை மேற்கொண்டு வரும் திட்டப் பணிகளின் செயலாக்கம் குறித்து அத்துறைக்கான அமைச்சர் திரு. துரைமுருகன், இன்று சென்னையில் பொறியாளர்களுடன் ஆய்வு மேற்கொண்டார்.

அனைத்துப் பணிகளையும் குறித்த நேரத்திற்குள் நிறைவேற்றுமாறு இக்கூட்டத்தில் அமைச்சர் அறிவுறுத்தியதாக மாநில அரசின் செய்திக்குறிப்பு தெரிவிக்கிறது.

சிறப்பு தூர்வாரும் பணிகளை விரைந்து முடிக்குமாறும் திரு. துரைமுருகன் வலியுறுத்தியதாக அதில் குறிப்பிடப்பட்டுள்ளது.

<<<<>>>>

தமிழகத்தில் திமுக அரசு பொறுப்பேற்ற பின்னர் கனிம வளங்கள் கொள்ளை அதிகரித்துள்ளதாக பிஜேபி மாநிலத்தலைவர் திரு. அண்ணாமலை குற்றம் சாட்டியுள்ளார்.

இதுதொடர்பாக சமூகவலைதளத்தில் அவர் விடுத்துள்ள அறிக்கையில், கேரளாவிற்கு அனுமதியின்றி கனிம வளங்களை கடத்தியதாக கோவை மதுக்கரை திமுக நகராட்சித் தலைவருக்கு சொந்தமான லாரிகள் பறிமுதல் செய்யப்பட்டிருப்பதை சுட்டிக்காட்டியுள்ளார்.

மாநிலம் முழுவதும் திமுகவினர் இதுபோன்ற செயல்களில் ஈடுபடுவதாகவும், இதனை கட்டுப்படுத்த திமுக அரசு தவறிவிட்டதாகவும் அவர் குறை கூறியுள்ளார்.

இதுபோன்ற செயல்களில் ஈடுபடுவோர் மீது திமுக அரசு எப்போது நடவடிக்கை எடுக்கும் என்றும் திரு. அண்ணாமலை வினவியுள்ளார்.

<<<<>>>>

தமிழகத்தில் திமுக அரசு கூட்டாட்சி தத்துவதற்கு எதிராக செயல்பட்டு வருவதாக த.மா.கா. தலைவர் திரு. ஜி.கே. வாசன் கூறியுள்ளார்.

நாமக்கல்லில் செய்தியாளர்களிடம் பேசிய அவர், மத்திய அரசுடன் மோதல் போக்கை திமுக அரசு கடைபிடித்து வருவதாக குற்றம் சாட்டியுள்ளார்.

இதன் காரணமாக மாநிலத்திற்கு தேவையான நன்மைகள் கிடைக்கவில்லை என்றும் அவர் தெரிவித்தார்.

நிர்வாக தோல்வியை மறைப்பதற்காக புதுப்புது பிரச்சினைகளை திமுக அரசு கையில் எடுப்பதாகவும் திரு. ஜி.கே. வாசன் குறை கூறினார்.

<<<<>>>>

தேசிய தடுப்பூசி தினம் இன்று கடைபிடிக்கப்பட்டது.

நோயற்ற சமுதாயத்தை உருவாக்குவதில் தடுப்பூசிகள் முக்கியப் பங்கு வகிப்பதாக செங்கல்பட்டு அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையின் அறுவை சிகிச்சை பிரிவு தலைவர் டாக்டர் அரசு எமது செய்தியாளரிடம் தெரிவித்தார்.

(சவுண்ட் பைட் - டாக்டர் அரசு 50 செகண்ட்ஸ்)

<<<<>>>>

சர்வதேச விண்வெளி ஆய்வு மையத்தில் உள்ள சுனிதா வில்லியம்ஸ், **Butch Wilmore** உள்ளிட்டோரை அழைத்து வருவதற்கான விண்கலம் வெற்றிகரமாக விண்வெளி ஆய்வு மையத்துடன் இணைந்துள்ளது.

இதன் காரணமாக, சுனிதா வில்லியம்ஸ் உள்ளிட்டோரை வரும் புதன்கிழமை பூமிக்கு அழைத்துவர நாசா திட்டமிட்டுள்ளதாக இந்திய அறிவியல் கல்வி மற்றும் ஆராய்ச்சி மையத்தின் பேராசிரியர் திரு. த.வி. வெங்கடேஸ்வரன் எமது செய்தியாளரிடம் தெரிவித்தார்.

(சவுண்ட் பைட் - வெங்கடேஸ்வரன் 55 செகண்ட்ஸ்)

<<<<>>>>

பிரபல எழுத்தாளர் நாறும்பூநாதன் இன்று திருநெல்வேலியில் காலமானார், அவருக்கு வயது 66. அவரது மறைவுக்கு முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் இரங்கல் தெரிவித்துள்ளார்.

<<<<>>>>

மதுரை மாவட்டம், அலங்காநல்லூர், கீழக்கரை ஏறுதழுவுதல் அரங்கத்தில் நடைபெற்ற ஜல்லிக்கட்டு போட்டியை மாநில அமைச்சர் திரு. மூர்த்தி இன்று தொடங்கி வைத்தார்.

ஆயிரத்திற்கும் மேற்பட்ட காளைகளும், 650க்கும் மேற்பட்ட வீரர்களும் இதில் பங்கேற்றதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

(வாய்ஸ் பைட் - ரகுராஜா 50 செகண்ட்ஸ்)

<<<<>>>>

மாவட்டச் செய்திகள்

மயிலாடுதுறை மாவட்டத்தில் இன்று நடைபெற்ற சமுதாக வளைகாப்பு நிகழ்ச்சியில் மாநில அமைச்சர் திரு. மெய்யநாதன் பங்கேற்று, கர்ப்பிணிகளுக்கு சீர் வரிசைகளை வழங்கினார்.

<<<<>>>>

வேலூர் மாவட்டத்தில் டெங்கு காய்ச்சல் பரவலை தடுப்பதற்காக பல்வேறு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக ஆட்சியர் திருமதி. சுப்புலெட்சுமி கூறியுள்ளார்.

<<<<>>>>

வார விடுமுறையை ஒட்டி கன்னியாகுமரியில் ஏராளமான சுற்றுலாப் பயணிகள் குவிந்துள்ளனர்.

<<<<>>>>

விளையாட்டுச் செய்திகள்

ஸ்பெயின் பாரா பேட்மிண்டன் போட்டியில் இந்தியா நான்கு தங்கப்பதக்கங்களை வென்றது.

கலப்பு இரட்டையர் பிரிவு இறுதியாட்டத்தில் நிதிஷ்குமார் - மனிஷா ராமதாஸ் இணை 21-14, 21-13 என்ற செட்கணக்கில் **Palak Kohli – Naveen Shivakumar** இணையை வென்று தங்கப்பதக்கத்தை வென்றது.

மற்றொரு கலப்பு இரட்டையர் பிரிவு இறுதியாட்டத்தில் கிருஷ்ணா நாகர் - நித்யஸ்ரீ சுமதி சிவன் இணை 21-11, 21-9 என்ற செட்கணக்கில் ஹாங்காங்கின் **Man Kai Chu – Choi Wing Kei** இணையை வென்று தங்கப்பதக்கம் வென்றது.

மகளிர் ஒற்றையர் பிரிவு இறுதியாட்டத்தில் நித்யஸ்ரீ சுமதி சிவன் 21-8, 21-12 என்ற செட்கணக்கில் பெருவின் **Giuliana Poveda-**வை வென்று தங்கப்பதக்கத்தை கைப்பற்றினார்.

ஆடவர் இரட்டையர் பிரிவில் **Nitish Kumar - Tarun** இணையும் தங்கப்பதக்கம் வென்றது.

**<<<<END>>>>**